Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | STC 432/2022 |
| Deposition of witness for | :: | PW.2 |
| Name | :: | கோவிந்தராஜ் |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுசவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

22.01.2025

முதல் விசாரணை:

1. நான் அருப்புக்கோட்டை வெள்ளைக்கோட்டை பாரதிதாசன் தெருவில் குடியிருந்து வருகிறேன். எதிரி சின்னசடையப்பனை எனக்கு தெரியும். அசா.1 சிவக்குமார் நடந்த சம்பவத்தை பற்றி சொன்னார். நான் சம்பவத்தன்று ஊரில் இல்லை. எதிரிகளுக்கும் தனக்கும் பிரச்சனை நடந்ததாக சொன்னார்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

1. கடந்த 03.06.2018 ம் தேதி மேற்படி இருகம்மாளை பெண் பார்க்க வரும்போது அசா.1 அவரது வீட்டு வழியில் போகும்போது தாயோழி மகனே எங்கடா எனது மகள் இருகம்மாளை ஒழித்து வைத்து இருக்கிறாய் என்று கேட்டதையும் அதற்கு அசா.1 எனக்கு தெரியாது என்று சொன்னதையும்

அதற்கு  இவனை இப்படி கேட்டால் ஒன்றும் சொல்லமாட்டான் என்று சொல்லி சின்னசடையப்பனும், சக்திவேலும் மூங்கில் கட்டையால் கை, விரல்கள், கழுத்து ஆகியவற்றில் அசா.1 அடித்ததை நேரில் பார்த்துவிட்டு தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு வி இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | STC 432/2022 |
| Deposition of witness for | :: | PW.1 |
| Name | :: | சிவக்குமார் |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுசவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

22.01.2025

முதல் விசாரணை:

1. நான் அருப்புக்கோட்டை மேட்டாங்கரை பகுதியில் குடியிருந்து வருகிறேன். எதிரியை தெரியும். இருகம்மாள் என்பவரை எனக்கு தெரியும். எனக்கு அவர் காதலி ஆவார். மேற்படி இருகம்மாளை கடந்த 12.12.2017 ம் தேதி பெண் பார்க்க வந்தபோது நான் அவர் வீட்டு வழியிலே செல்லும்போது அவரது தந்தை சின்னசடையப்பனும், சக்திவேலும் கம்பால் என்னை கையிலும், விரலிலும், கழுத்திலும் அடித்தார்கள். அதன்பிறகு நான் அவர்களோடு பேசுவது இல்லை. அன்றைய தினம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சைக்கு சென்றேன். மருத்துவமனையில் 13 நாட்கள் இருந்தேன். இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பகுதி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

1. கடந்த 03.06.2018 ம் தேதி மேற்படி இருகம்மாளை பெண் பார்க்க வரும்போது நான் அவரது வீட்டு வழியில் போகும்போது தாயோழி மகனே எங்கடா எனது மகள் இருகம்மாளை ஒழித்து வைத்து இருக்கிறாய் என்று கேட்டது உண்மை தான். நான் எனக்கு தெரியாது என்று சொன்னதும் உண்மை தான். அப்போதே இவனை இப்படி கேட்டால் ஒன்றும் சொல்லமாட்டான் என்று சொல்லி சின்னசடையப்பனும், சக்திவேலும் மூங்கில் கட்டையால் கை, விரல்கள், கழுத்து ஆகியவற்றில் அடித்தார்கள் என்றால் உண்மைதான். மேற்படி காயத்திற்கு தான் 13 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் ஆமாம். 03.06.2018 அன்று நடந்த சம்பவத்தைதான் புகார் மனுவில் விவரமாக கூறியுள்ளேன் என்றால் ஆமாம்.

**எதிரி தரப்பில் கு வி இல்லை என்று சொன்னதன் பேரில் முடித்து வைக்கப்படுகிறது**